ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஶ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஶ்ரீஶ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை

மோட்சத்திற்கு வைராக்யமே முதன்மை

மனிதனுக்குக் கிடைக்கக்கூடிய உயர்ந்த பேறு **மோட்சம்** — அதாவது, பிறவி–இறப்பு எனும் சம்சாரச் சுழற்சியிலிருந்து விடுதலை பெறுதல். அதனை அடைவதற்கு, அவன் வெளியில் எங்கும் தேடவோ, பிறரிடமிருந்து வெளிப்புற உதவியை நாடவோ தேவையில்லை. அவன் செய்ய வேண்டியது தன்னைத் தானே ஒழுங்குபடுத்திக் கொள்ளுதல், தன்னை உள்ளார்ந்த முறையில் பக்குவப்படுத்திக் கொள்ளுதலே ஆகும். இதைத்தான் ஶ்ரீ பகவத்பாதர் கூறுகிறார்:

उद्धरेदात्मनाऽऽत्मानं मग्नं संसारवारिधौ

உத்^{3}த^{4}ரேதா^{3}த்மனா(ஆ)த்மானம்’ மக்^{3}னம்’ ஸம்’ஸாரவாரிதௌ^{4}

இதன் பொருள்: சம்சாரம் என்னும் பெருங்கடலில் மூழ்கியிருப்பவனுக்கு, தன்னைத் தானே உயர்த்திக் கொள்வதே ஒரே வழியாகும். இங்கு தன்னைத்

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

தானே உயர்த்திக் கொள்வது என்பது மனத்தையும் புலன்களையும் அடக்கி, அவற்றை வெளிப்புறப் பொருட்களிலிருந்து திருப்பி, அகத்திலுள்ள ஆத்மாவில் நிலைநிறுத்துவதாகும். இத்தகைய மனநிலையை அடைவதற்கு, உலகியல் விஷயங்களில் பற்றின்மையை (வைராக்யத்தை) வளர்த்துக் கொள்வது மிகவும் அவசியம்.

வெளியில் நிகழும் அனைத்தும் மாயை, அதாவது நிலையான உண்மையல்ல என்ற உறுதியான நம்பிக்கையே வைராக்யத்தை உருவாக்கும். இந்த உறுதியைப் பெறுவதற்கு குருவின் அருளும், அவருடைய உபதேசமும் இன்றியமையாதவை. குருவின் அருளுக்குத் தகுதியுடையவனாகத் தன்னை உருவாக்கிக் கொள்பவன், சம்சாரக் கடலைத் தானே கடப்பதோடு மட்டுமல்லாமல், பிறருக்கும் அதைக் கடக்க வழிகாட்டுவான். அதுவே அழியாத செல்வம். அதைவிட உயர்ந்த பேறு வேறு எதுவுமில்லை.

பெரியோர்கள் கூறியுள்ளனர்:

तत्कर्म यन्त्र बन्धाय सा विद्या या विमुक्तये ।
आयासायापरं कर्म विद्यान्या शिल्पनैपुणम् ।।

தத்கர்ம யன்ன ப^{3}ந்தா^{4}ய ஸா வித்^{3}யா யா விமுக்தயே .

ஆயாஸாயாபரம்’ கர்ம வித்^{3}யான்யா ஶில்பனைபுணம் ..

இந்தச் சுலோகத்தின் சாராம்சம்:

ஆத்மவித்தை (ஆத்மஞானம்) மட்டுமே மோட்சத்தையும், சம்சாரத்திலிருந்து முழு விடுதலையையும் அளிக்க வல்லது. மோட்சத்தை அடைவதற்கு வேறு எந்த வழியும் இல்லை.

இதனை அனைவரும் எப்போதும் நினைவில் வைத்திருந்து, ஆத்மஞானத்தை அடைய முயற்சி செய்ய வேண்டும் என்று நாங்கள் ஆசீர்வதிக்கிறோம்.

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகளின் திவ்ய சரித்திரம்

9. காலடி யாத்திரை

அங்கிருந்து புதுக்கோட்டை மார்க்கமாக கோவிலூர் சென்றார்கள். அங்குள்ள நாட்டுக்கோட்டை செட்டியார் வகுப்பைச் சேர்ந்த மடாதிபதி வீரப்ப தேசிகருடைய பிரார்த்தனைக்கு இணங்கி அங்கு நடந்த தேவாலய கும்பாபிஷேகத்திற்கும் ஸ்ரீ சங்கர ஜயந்தீ மஹோத்ஸவத்திற்கும் அங்கேயே தங்கிவிட்டு, பிறகு, காரைக்குடி, கானாடுகாத்தான். பள்ளத்தூர், கோட்டையூர், தேவகோட்டை முதலான கிராமங்களில் நாட்டுக்கோட்டை செட்டியார்களின் ஸத்காரங்களைப் பெற்றுக்கொண்டு அவர்களுக்கு அனுக்ரஹம் செய்துகொண்டு, ஸுப்ரஹ்மண்ய க்ஷேத்ரமான குன்னக்குடிக்கு விஜயம் செய்தார்கள். அங்கு கீலக வருஷத்திய சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தை நிறைவேற்றிவிட்டு திருப்பத்தூரில் நவராத்திரி மஹோத்ஸவத்தை நடத்திவிட்டு கிரமமாய் ஹாலாஸ்ய க்ஷேத்திரமான மதுரைக்கு வந்து வழக்கம் போல கல்யாண மண்டபத்தில் ஜாகை செய்து இருபத்தைந்து தினம் அந்நகரத்தில் தங்கி சிஷ்யர்களுக்கு விசேஷமாக அனுக்ரஹம் செய்துவிட்டு, திருப்புவனம், மானாமதுரை, பரமக்குடி மார்க்கமாய் ராமனாதபுரம் போய், அங்கு ஜமீன்தாரான முத்துராமலிங்க ராஜராஜேச்வர ஸேதுபதியவர்களால் விசேஷமாக ஸத்காரம் செய்யப்பட்டு அவருக்கு அனுக்ரஹம் செய்துவிட்டு, மண்டபம், பாம்பன் வழியாக கீலக கார்த்திகை சுக்ல ஏகாதசி (4-11-1908) புதவாரத்தன்று ராமேசுவர க்ஷேத்திரத்திற்கு விஜயம் செய்தார்கள். தனுஷ்கோடியில் மூன்று நாட்களும் ராமேசுவரத்தில் இரண்டு வாரமும் வாஸம் செய்தார்கள்.

பிறகு வத்திராயிருப்பு, ஸ்ரீவில்லிப்புத்தூர், தென்காசி வழியாக தாம்ரபர்ணீ தீரத்தில் ஏகாந்தமாயும் அதிரமணீயமாயுமுள்ள பாபவிநாச க்ஷேத்திரம் வந்து, அங்கு ஸௌம்ய வருஷத்திய சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தை நடத்தி மூன்று மாஸம் தாமஸித்து ஆனந்தமாயிருந்தார்கள். பிறகு தீர்த்தபதி சிங்கம்பட்டி ஜமீன்தாரால் பிரார்த்திக்கப்பட்டு பாணதீர்த்தமென்ற மனோஹரமான

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

பர்வதத்திற்கு விஜயம் செய்து அங்கு மூன்று நாள் ஆனந்தமாயிருந்துவிட்டு, நவராத்திரி மஹோத்ஸவத்தை யுத்தேசித்து திருநெல்வேலிக்கு வந்து வழக்கம்போல் சாலிவாடீசவரர் தேவாலயத்தில் தங்கி தர்சனார்த்தம் வரும் சிஷ்யர்களை அனுக்ரஹித்ததுடன், அங்குள்ள ஸ்ரீ சிருங்கேரி மடத்தில் ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாசார்யார் மூர்த்தியொன்றை பிரதிஷ்டை செய்து கொடுத்து விசேஷமாக அனுக்ரஹித்தார்கள்.

பிறகு திருச்செந்தூர், நாங்குனேரி மார்க்கமாக திருவனந்தபுரம் ஸம்ஸ்தானத்தில் தோவாழக்கோட்டை என்ற கிராமத்தில் பிரவேசிக்கும் ஸமயம், மஹாராஜாவின் உத்தரவுப்படி ஸகல ராஜ மரியாதைகளுடன் வரவேற்கப்பட்டு, அங்குள்ள ராஜ அரண்மனையில் தங்கினார்கள். அங்கிருந்து கன்யாகுமாரி க்ஷேத்திரம் சென்று மூன்று நாள் அங்கே அம்பிகையை தர்சனம் செய்துவிட்டு, ஸஞ்சாரக்கிரமமாக ஸௌம்ய வருஷ மார்க்கசீர்ஷ பௌர்ணமீ தினம் (26-12-1909) காலை ஐந்து மணிக்கு ராஜதானியான திருவனந்தபுரத்திற்கு இரண்டு மைல் தூரத்திலுள்ள கரமனை நதியில் ஸ்நாநாதிகளை முடித்துக்கொண்டு ஸம்ஸ்தான மந்திரி ஸர் பி. ராஜகோபாலாசார்யார் முதலான அதிகாரிகளுக்கு தர்சனம் கொடுத்தார்கள். பிறகு புரவாஸிகளால் பூர்ணகும்பாதி மரியாதைகளுடன் ஸேவிக்கப்பெற்று, ரத்ன கிரீடம் முதலான ஆஸ்தான சின்னங்களால் அலங்கரிக்கப்பெற்றவராய் பல்லக்கில் ஆரோஹணம் செய்து, ஸகலவித ராஜ மரியாதைகளுடன் ராஜவீதி வழியாக விஜயம்செய்து, கோட்டை வாசலுக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கு தம் பரிஜனங்களுடன் காத்துக்கொண்டிருந்த மஹாராஜர் ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து நல்வரவு ஸமர்ப்பிக்கையில் அவருடைய பக்தி சிரத்தையைக்கண்டு மிக்க ஸந்தோஷப்பட்டு பலமந்திராக்ஷதைகள் கொடுத்து அனுக்ரஹித்து அனுமதி கொடுத்துவிட்டு, பிறகு கோட்டைக்குள் பிரவேசித்து நான்கு வீதிகளிலும் ஊர்வலம் வந்து வாஸத்திற்காக ஸித்தப் படுத்தியிருந்த அரண்மனைக்கு வந்துசேர்ந்தார்கள். மஹாராஜர் வகையாக பாததூளி பூஜை முதலிய உபசாரங்கள் நடந்தன. அந்த ராஜதானியில் மஹாராஜாவாலும் மற்றும் புரவாஸிகளாலும் விசேஷமாக ஆதரிக்கப்பட்டு எட்டுநாள் வாஸம் செய்தார்கள். மஹாராஜர் அடிக்கடி தர்சனத்திற்கு வந்து மந்திரோபதேசம், ஹிதோபதேசங்கள் பெற்று ஆஸ்தான வழக்கப்படி பாத காணிக்கையாக பதினாயிரம் ரூபாய் அர்ப்பணம் செய்ததுடன், ஒரு யானையையும் காலடிபரிஷ்காரத்தை யுத்தேசித்து இன்னும் பதினாயிரம் ரூபாயும் ஸமர்ப்பணம் செய்தார்கள். மஹாராஜருக்கும் ரத்ன கண்டாபரணம் முதலானது அனுக்ரஹித்து அவருக்கும் புரவாஸிகளுக்கும் பலமந்திராக்ஷதைகள் கொடுத்துவிட்டு பிரயாணமாகி, ஜனார்தன க்ஷேத்திரம் மார்க்கமாக காலடி ஸமீபம் விஜயமானார்கள்.

(தொடரும்...)





ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

॥ श्रीसुब्रह्मण्यभुजङ्गम् ॥

||ஶ்ரீ ஸுப்3ரஹ்மண்ய பு4ஜங்க3ம் ||

(அ) கைகளைத் துதிக்கிறார் :-

विधौ क्लृप्तदण्डान्खलीलाधृता ण्डा-न्निरस्तेभशुण्डान्द्विषत्कालदण्डान् ।
हतेन्द्रारिषण्डाञ्जगत्राणशौण्डा-न्सदा ते प्रचण्डाञ्श्रये बाहुदण्डान् ॥ १२ ॥

விதௌ4 க்ல்ரு’ப்தத3ண்டா3ன்க2லீலாத்4ரு’தாண்டா3-
ந்நிரஸ்தேப4ஶுண்டா3ந்த்3விஷத்காலத3ண்டா3ன் |
ஹதேந்த்3ராரிஷண்டா3ஞ்ஜக3த்த்ராணஶௌண்டா3-
ந்ஸதா3 தே ப்ரசண்டா3ஞ்ஶ்ரயே பா3ஹுத3ண்டா3ன் ||12||

विधौ (விதௌ4) = விதாதாவாகிய பிரம்மாவின் படைப்புத் தொழிலில்; உலக ஒழுங்கில்; **क्लृप्त** (க்ல்ரு’ப்த) = அமைக்கப்பட்ட, நிலைநிறுத்தப்பட்ட; **दण्डान्** (த3ண்டா3ன்) = தண்டனைகளை; ஆட்சி அதிகாரத்தை; **खल** (க2ல) = தீயவர்கள்; **ईल/लीला** (ஈல/லீலா) = விளையாட்டாக, எளிதாக; **धृत** (த்4ரு’த) = தாங்கிய, சுமந்த; **अण्डान्** (அண்டா3ன்) = அண்டங்களை, பிரபஞ்சங்களை; **निरस्त** (நிரஸ்த) = அகற்றிய, ஒழித்த; **इभ** (இப4) = யானை; **शुण्डान्** (ஶுண்டா3ன்) = துதிக்கைகள்; **द्विषत्** (த்3விஷத்) = பகைவர்கள்; **कालदण्डान्** (காலத3ண்டா3ன்) = யமதண்டம்போன்ற, மரணத்தை உண்டாக்கும் தண்டனை; **हत** (ஹத) = அழித்த; **इन्द्र** (இந்த்3ர) = இந்திரன்; **अरि** (அரி) = பகைவர்கள்; **षण्डान्** (ஷண்டா3ன்) = கூட்டங்களை; **जगत्** (ஜக3த்) = உலகம்; **त्राण** (த்ராண) = காப்பது; **शौण्डान्** (ஶௌண்டா3ன்) = மிகுந்த திறமைசாலிகள், வல்லவர்கள்; **सदा** (ஸதா3) = எப்போதும்; **ते** (தே) = உன்னுடைய; **प्रचण्डान्** (ப்ரசண்டா3ன்) = மிகுந்த வலிமையுடைய; **श्रये** (ஶ்ரயே) = நான் சரணடைகிறேன்; **बाहु-दण्डान्** (பா3ஹு-த3ண்டா3ன்) = புஜங்கள், கரங்கள்

முருகனின் பன்னிரு கைகளும் மிகுந்த பலம் வாய்ந்தன. அவைகள் விளையாட்டாகவே எல்லா அண்டங்களையும் காக்கின்றன. பிரம்மதேவனைக் கூடத் தண்டிக்கும் சக்தி பெற்றன. யானையின் வடிவு பெற்ற அரக்கனின் துதிக் கைகளை அறுத்தெரிந்தன. பகைவர்களைத் தண்டிக்கும் யம தண்டமும் இவையே. இந்திரனுடைய சத்ருக்களை அழித்து அவனைக் காத்ததும் இவையே. இவ்வாறு வலிமை பெற்ற ஆறுமுகனின் புஜங்களைப் போற்றுகிறேன்.

முன் ஒரு காலத்தில் முருகக்கடவுள் பிரம்மதேவனிடம் பிரணவத்தின் பொருளைக் கேட்டார். பிரஹ்மாவுக்குச் சரியான பதில் சொல்லத்தெரியவில்லை. ஆதலால் முருகக் கடவுள் பிரம்மதேவனைச் சிறையில் அடைத்தார். மேலும் முருகனுக்கும் தாரகன் என்ற அரக்கனுக்கும் போர் மூண்ட பொழுது தாரகன் யானை முகத்துடன் தோன்றி அவரை எதிர்த்தான். முருகன் தன் கைகளால் அவனது துதிக்கைகளை வெட்டி வீழ்த்தினார் என்ற வரலாறுகள் இங்கு குறிப்பிட பட்டிருக்கிறது. இதனால்

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

முருகனின் புஜங்களை பஜிப்பவர்களுக்கு சத்ரு நாசமும், இஷ்டசித்தியும் ப்ரம்ம ஞானமும் உண்டாகும் என்று தெரிகிறது. (12)

(அ) முருகனுடைய முகமண்டலங்களை இரு சுலோகங்களால் துதிக்கிறார்:-

सदा शारदाः षण्मृगाङ्का यदि स्युः समुद्यन्त एव स्थिताश्चेत्समन्तात् ।
सदा पूर्णविम्बाः कलङ्कैश्च हीना-स्तदा त्वन्मुखानां ब्रुवे स्कन्द साम्यम् ॥ १३ ॥

ஸதா³ ஶாரதா³: ஷண்ம்ரு’கா³ங்கா யதி³ ஸ்யு:
ஸமுத்³யந்த ஏவ ஸ்தி²தாஶ்சேத்ஸமந்தாத் |
ஸதா³ பூர்ணவிம்பா³: கலங்கைஶ்ச ஹீனா-
ஸ்ததா³ த்வன்முகா²னாம்’ ப்³ருவே ஸ்கந்த³ ஸாம்ய⁴ம் ||13||

सदा (ஸதா³) = எப்போதும்; **शारदाः** (ஶாரதா³:) = சரத்காலத்திற்குரிய (இலையுதிர் காலத்தின்); **षण्** (ஷண்) = ஆறு; **मृगाङ्काः** (ம்ரு’கா³ங்கா:) = சந்திரர்கள் (மான்-அடையாளமுடைய சந்திரன்); **यदि** (யதி³) = ஒருவேளை, எப்போது; **स्युः** (ஸ்யு:) = இருந்தால்; **समुद्यन्तः** (ஸமுத்³யந்த:) = உதயமாகி; **एव** (ஏவ) = மட்டுமே, உண்மையாக; **स्थिताः** (ஸ்தி²தா:) = நிலைத்திருந்து; **चेत्** (சேத்) = என்றால்; **समन्तात्** (ஸமந்தாத்) = எல்லாப் பக்கங்களிலும்; **सदा** (ஸதா³) = எப்போதும்; **पूर्ण** (பூர்ண) = முழுமையான; **विम्बाः** (விம்பா³:) = வட்டங்கள், பிம்பங்கள்; **कलङ्कैः** (கலங்கை:) = களங்கங்களால்; **हीनाः** (ஹீனா:) = அற்றவை; **तदा** (ததா³) = அப்போதுதான்; **त्वत्** (த்வத்) = உன்னுடைய; **मुखानाम्** (முகா²னாம்) = முகங்களுக்கு; **ब्रुवे** (ப்³ருவே) = நான் கூறுவேன், ஒப்பிடுவேன்; **स्कन्द** (ஸ்கந்த³) = ஸ்கந்தா!; **साम्यम्** (ஸாப்⁴யம்) = ஒப்புமை, சமானம்.

உலகில் அழகிய முகத்தை மதிவதனம் எனறு கூறுவார்கள். ஆனால் முருகனுடைய முகங்களுக்கோ நிகர் கிடையாது. ஏனெனில் அவைகள் ஆறும் எப்பொழுதும் பொலிவு பெற்று விளங்குகின்றன. சந்திரனோ எனில் ஒன்றே ஒன்று. அவனும் எப்பொழுதும் பூர்ணகலைகளுடன் விளங்குவதில்லை. மேலும் அவனிடம் களங்கம் குடி வேண்டும். கொண்டிருக்கின்றது. சரத்காலத்தில் உதய ஸமயத்தில் தான் அவன் மிகவும் அழகாகத்தோன்றுகின்றான். மற்ற காலங்களில் அவ்வளவு அழகு அவனுக்குக் கிடையாது. முருகனுடைய ஆறுமுகங்களுக்கும் உவமை கூற ஆறுமதிகள் தேவை. அவைகள் எப்பொழுதும் பூர்ணமாயும் மாசற்ற தாயும் பொலிவு பெற்றதாயும் இருத்தல் அப்பொழுதுதான் அவைகள் ஆறுமுகங்களுக்கு ஒப்பாகும். சந்திரனைப்பார்ப்பதால் தாபம் நீங்குகின்றது. ஆனந்தம் உண்டாகின்றது. அதுபோல் இம்முகங்களை த்யானம் செய்வதாலும் தர்சனம் பண்ணுவதாலும் தாபங்கள் நீங்கி மகிழ்ச்சி ஏற்படும் என்பது தெளிவாகக் காட்டப்படுகின்றது.

(தொடரும்…)


Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita


ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

सन्ध्यावन्दनम्

ஸந்த்^{4}யாவந்த^{3}னம்

[சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அருளிய விளக்கங்களுடன்]

காயத்ரீயின் மஹிமை

எந்த ஆசையும் இல்லாதவர்களைப் போலுள்ள சிலரையும் நாம் பார்க்கிறோம். அவர்களை நாம் ஸன்யாஸிகள் என்று அழைக்கின்றோம். அப்படிப்பட்ட சிலரையும் நம்மால் பார்க்க முடிவதால் 'எல்லோரும் ஏதாவது ஆசையுடன் தான் உள்ளார்கள்' என்ற அபிப்ராயம் தவறு என்ற கருத்து நமக்கு ஏற்பட வாய்ப்பு உள்ளது. மேலும், ப்ருஹதாரண்யக உபநிஷத் ஸன்யாஸிகளை 'ஆசையற்றவர்கள்' என்று கூறுகிறது:

एतद्ध स्म वै तत्पूर्वे विद्वांसः प्रजां न कामयन्ते किं प्रजया करिष्यामो येषां नोऽयमात्माऽयं लोक इति ते ह स्म पुत्रैषणायाश्च वित्तैषणायाश्च लोकैषणायाश्च व्युत्थायाथ भिक्षाचर्यं चरन्ति (बृहदारण्यकोपनिषद् ४.४.२२)

"ஆத்மாவை அறிந்த முன்னோர்கள் 'ஆத்ம லோகத்தை அடைந்த நாம் ப்ரஜைகளால் என்ன அடையவேண்டும்?' என்று கருதி ப்ரஜைகளை விரும்பவில்லை; புத்ர இச்சை, செல்வ இச்சை, லோக இச்சை என்னும் ஆசைகளைத் துறந்து ஸன்யாஸ வாழ்க்கையை அனுஷ்டிக்கிறார்கள்." ஸன்யாஸிகளுக்கு ஆசைகள் கிடையாது என்றே இந்த உபதேசத்திலிருந்தும் நமக்குத் தோன்றலாம். மேலோட்டமாகப் பார்த்தால் இப்படித்தான் தோன்றும்.

சற்றே நுட்பமாக இவ்விஷயத்தை நாம் ஆராய்ந்து பார்ப்போம். ஸந்யாஸிகள் எதற்காகக் கஷ்டமான விரதங்களை அனுஷ்டித்தார்கள்? விரதங்களுக்கு ஏதாவது ப்ரயோஜனம் இருந்திருக்க வேண்டுமல்லவா? நாம் இப்போது பார்த்த உபநிஷத் வாக்கியம் என்ன சொல்கின்றது? "எங்களது பலம் ஆத்மலோகம்"

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

என்று ஸந்யாசிகள் கருதுவதாகச் சொல்கிறது. இதிலிருந்து அவர்களுக்கு ஆத்மாவைக் காண்பதில் ஆசை இருப்பது தெளிவாகத் தெரிகிறது. இதே உபநிஷத்திலேயே நாம் பார்த்த வாக்கியத்திற்கு முன்னதாக,

एतमेव प्रव्राजिनो लोकमिच्छन्तः प्रव्रजन्ति (बृहदारण्यकोपनिषद् ४.४.२२)

"இந்த ஆத்மாவை விரும்பித்தான் ஸன்யாஸிகள் தமது இல்லத்தைத் துறக்கிறார்கள்" என்று வருகிறது. இதிலிருந்து ஒவ்வொரு மனிதனும் ஏதாவது ஓர் ஆசையோடுதான் வாழ்கிறான் என்று நம்மால் தீர்மானம் செய்ய முடிகிறது. எதை ஒருவன் விரும்புகிறானோ அதை அடைவதற்காக அவன் தனது உடலையும், வாக்கையும், மனதையும் பயன்படுத்துகிறான்.

உலக விஷயமான எந்த ஒரு ஆசையையும் நிறைவு செய்வதற்கு நமக்கு என்ன செயல்பாடு தேவைப்படுகின்றது என்பதை நாம் லௌகிக அன்வய-வ்யதிரேக பரீட்சையின் மூலமாகவே முடிவு செய்ய வேண்டும்.

(ஒன்று இருக்கும் பொழுது மற்றொன்று உண்டாவது அன்வயம் எனப்படுகிறது; அன்வயத்திற்கு உதாரணத்தை இப்பொழுது பார்ப்போம். மண் இருக்கும் பொழுது பானை உண்டாவது அன்வயம். அந்த ஒன்று இல்லாதபொழுது அந்த மற்றொன்று ஏற்படாமல் இருப்பது வ்யதிரேகம். வ்யதிரேகத்திற்கு உதாரணம் - மண் இல்லாதபொழுது பானை உண்டாகாமல் இருப்பது. அன்வயமோ வ்யதிரேகமோ இல்லாமலிருந்தால் ஒரு பொருளை மற்றொரு பொருளின் காரணமாகச் சொல்ல முடியாது. உதாரணத்திற்கு நூலுக்கும் பானைக்கும் அன்வ வ்யதிரேகங்கள் இல்லை. ஆகையால் நூலானது பானைக்குக் காரணம் ஆகமுடியாது. லௌகிக ஆசைகளை எப்பொழுது பூர்த்தி செய்ய முடியும் என்றால், அவ்வித ஆசைகளை நிறைவேற்றும் ஸாதனம் கிடைத்தால் ஆசைகள் பூர்த்தியாகும். அந்த ஸாதனத்திற்கும், ஆசைகளின் நிறைவேற்றத்திற்கு மிடையே லௌகிக அன்வய-வ்யதிரேகங்கள் இருக்க வேண்டும்.) ஆனால், ஆசைகள் எல்லாவற்றின் நிறைவேற்றத்திற்கும் லௌகிக அன்வய-வ்யதிரேக பரீட்சைகளே போதும் என்று சொல்ல முடியாது. ஸ்வர்கத்தின் விஷயத்திலும் ஆத்மாவின் விஷயத்திலும் இந்த லௌகிகப் பரீட்சைகள் பயன்படுவதில்லை. (ஸ்வர்க்கத்தைப் பற்றியும் ஆத்மாவைப் பற்றியும் நாம் புலன்களால் அறிந்து கொள்ள முடியாததால் லௌகிக அன்வய வ்யதிரேகப் பரீட்சைகளை எப்படிச் செய்வது?)

(தொடரும்…)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

श्रीमन्नारायणीयम्

ஸ்ரீமந்நாராயணீயம்

अष्टमं दशकम्

அஷ்டமம்' த3ஶகம் - பிரளயமும் சிருஷ்டியும்



अस्यादृशां पुनरहर्मुख कृत्य तुल्यां सृष्टिं करोत्यनुदिनं स भवत्प्रसादात् ।

प्राग्ब्रह्मकल्प -जनुषां च परायुषां तु सुप्त प्रबोधन प्रमाऽस्ति तदा विसृष्टिः ॥ ३ ॥

அஸ்யாத்3ரு'ஶாம்' புனரஹர்முக2 க்ரு'த்ய துல்யாம்'

ஸ்ரு'ஷ்டிம்' கரோத்யனுதி3னம்' ஸ ப4வத்ப்ரஸாதா3த் |

ப்ராக்3ப்3ரஹ்மகல்ப -ஜனுஷாம்' ச பராயுஷாம்'

து ஸுப்த ப்ரபோ3த4ன ப்ரமா(அ)ஸ்தி ததா3 விஸ்ரு'ஷ்டி: ||3||

"தங்களுடைய அருளால் பிரம்மா நாள்தோறும் படைப்பை நிகழ்த்துகிறான். அது, ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்து தன் நித்தியக் கடமைகளைத் தொடங்குவதைப் போன்றதாகும். ஆனால், முந்தைய பிரம்ம கற்பத்தில் வாழ்ந்து, தங்கள் ஆயுளை முடித்த உயிர்களுக்கு, அடுத்த படைப்பு என்பது புதிதாக உண்டாகும் ஒன்றல்ல; உறக்கத்திலிருந்து விழித்தெழுவதைப் போன்ற மறுவெளிப்பாடாகும்."

पंचाशदब्धमधुना स्ववयोऽर्धरूप-मेकं परार्धमतिवृत्य हि वर्ततेऽसौ ।

तत्रान्त्यरात्रि जनितान् कथयामि भूमन् पश्चाद्दिनावतरणे च भवद्विलासान् ।। ४ ।।

பஞ்சாஶத3ப்3த4மது4னா ஸ்வவயோ(அ)ர்த4ரூப-

மேகம்' பரார்த4மதிவ்ரு'த்ய ஹி வர்ததே(அ)ஸௌ |

தத்ராந்த்யராத்ரி ஜனிதான் கத2யாமி

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

பூ⁴மன் பஶ்சாத்³தி³னாவதரணே ச ப⁴வத்³விலாஸான் ||4||

"இப்போது, அந்தப் பிரம்மா தனது ஆயுளின் முதல் பாதியாகிய ஒரு பரார்த்தத்தை நிறைவு செய்து, இரண்டாம் பரார்த்தத்தில் இருக்கிறான். அந்த இரண்டாம் பரார்த்தத்தின் இறுதி இரவில் நிகழ்ந்த சம்பவங்களையும், அதன் பின்னர் புதிய பகல் தொடங்கியபோது வெளிப்பட்ட தங்களுடைய தெய்வீக லீலைகளையும், ஓ எல்லையற்ற பெருமானே! நான் இப்போது விவரிக்கிறேன்."

दिनावसानेऽथ सरोज योनिः सुषुप्ति कामस्त्वयि सन्निलिल्ये ।

जगन्ति च त्वज्जठरं समीयु-स्तदेद - मेकार्णवमास विश्वम् ॥ ५ ॥

தி³னாவஸானே(அ)த² ஸரோஜ யோனி꞉

ஸுஷுப்தி காமஸ்த்வயி ஸன்னிலில்யே |

ஜக³ந்தி ச த்வஜ்ஜட²ரம்' ஸமீயு-

ஸ்ததே³த³ - மேகார்ணவமாஸ விஶ்வம் ||5||

"பிரம்மாவின் பகல் முடிவடைந்தபோது, தாமரையில் தோன்றிய பிரம்மா ஆழ்ந்த உறக்கத்தை விரும்பி தங்களுள் லயமடைந்தார். உலகங்கள் அனைத்தும் தங்களுடைய திருவயிற்றினுள் ஒடுங்கின. அப்போது இந்தப் பிரபஞ்சம் முழுவதும் ஒரே பெருங்கடலாக மட்டுமே காணப்பட்டது."

(தொடரும்..) Our Mail ID : Info@voiceofjagadguru.com

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

श्री रुद्रप्रश्नः

ஶ்ரீ ருத்³ரப்ரஶ்ன:

(நமகம்)

(பு⁴வந்தயே) = பூமியை வளப்படுத்துபவருக்கு; உலகை வளர்ப்பவருக்கு; **(வாரிவஸ்க்ரு'தாய = {வார} =** நீர் ; **{வஸ்} =** செழிக்கச் செய்தல், வளப்படுத்துதல் ; **{க்ரு'த} =** செய்தவர்) **=** நீரால் வளமளிப்பவருக்கு; மழையைப் பொழிந்து செழிக்கச் செய்பவருக்கு; **(ஔஷதீ⁴னாம்) =** மூலிகைகள், செடிகள், பயிர்கள் ஆகியவற்றின் ; **(பதயே) =** தலைவருக்கு, அதிபதிக்கு ; **(நமோ நம:) =** மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.

[பூமியை நீரால் வளப்படுத்தி, அனைத்து மூலிகைகள் மற்றும் தாவரங்களின் அதிபதியாக விளங்கும் ருத்ரனுக்கு மீண்டும் மீண்டும் வணக்கம்.] ||2.2 (2)||

(உச்சை:) = உரக்க, மிக உயர்ந்த ; **(கோ⁴ஷாய) =** முழக்கம் உடையவருக்கு ; **(ஆக்ரந்த³யதே) =** போர்முழக்கம் எழுப்புபவருக்கு; பகைவர்களை நடுங்கச் செய்பவருக்கு ; **(பத்தீனாம்) =** காலாட்படைகளின் ; **(பதயே) =** தலைவருக்கு ; **(நமோ நம:) =** மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.

[உரத்த போர்முழக்கம் எழுப்புபவரும், காலாட்படைகளின் தலைவருமான ருத்ரனுக்கு மீண்டும் மீண்டும் வணக்கம்.] ||2.2(3)||

(க்ரு'த்ஸ்ன) = அனைத்தும், முழுவதும் ; **(வீதாய) =** பரவி இருப்பவருக்கு; அனைத்தையும் சூழ்ந்திருப்பவருக்கு ; **(தா⁴வதே) =** விரைந்து ஓடுபவருக்கு; உடனடியாகக் காப்பவருக்கு ; **(ஸத்த்வனாம்) =** வீரர்கள், வலிமையுடைய உயிர்கள், அல்லது அனைத்து ஜீவராசிகளின்; **(பதயே) =** தலைவருக்கு, அதிபதிக்கு; **(நமோ நம:) =** மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.

[எங்கும் பரவி நிற்பவரும், பக்தர்களைக் காக்க விரைந்து வருபவரும், அனைத்து உயிர்களுக்கும் (அல்லது வீரர்களுக்கும்) அதிபதியான ருத்ரனுக்கு வணக்கம்.] ||2.2 (4)||

(தொடரும்...)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

Our Website link : https://www.voiceofjagadguru.com/

Telegram Channel : https://t.me/voiceofjagadguru

Instagram Channel :

https://www.instagram.com/stories/voice_of_jagadguru_voj/3601249542534134684?igsh=MW90YW13N2c5b2hqaA==

WhatsApp Community Channel: https://chat.whatsapp.com/Ly4wlaTu8Kc3sjjEYU8KGu

YouTube Channel : https://youtube.com/@jagad-guru-channel?si=brkLFqiz8sZJ6UIl

Facebook link : https://www.facebook.com/share/1Du5xkve4e/

For free e magazines : Our Mail ID : Info@voiceofjagadguru.com

Editorial Board		
Sri P A Murali	Hon' Advisor	Administrator & CEO, Sri Sringeri Mutt & It's Properties, Sringeri
Sri S N Krishnamurthy	Hon' Editor	Sri Sringeri Mutt, Sringeri
Sri Tangirala Shiva Kumara Sharma	Hon' Editor	Sri Sringeri Mutt, Sringeri
PujyaSri Swami Guruparananda	Hon' Editor	Founder Acharya, Poornalaya & Mentor Sri Swami Chidbhavananda Ashram, Vedapuri, Theni.
Sri B Vijay Anand	Web Director	Coimbatore
Smt B Srimathi Veeramani	Web Asst Director & Chief Editor	Tirunelveli
K M Kasiviswanathan	Hon' Editor	Tirunelveli

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்